

# அமரர் திருமதி. கணேசமூர்த்தி புவனேஸ்வரி

அவர்களின்

## நினைவு வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25.06.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். சரவணை கிழக்கு மயிலப்புலத்தை பிறப்பிடமாகவும்,

இல 264, சில்வாவீதி, வட்டக்கச்சி கிளிநொச்சியை

வதிவிடமாகவும் கொண்ட

அமரர் திருமதி.

# கணேசமூர்த்தி புவனேஸ்வரி (இந்திரா)

அவர்களின்

31ம் நாள் சிவபதப்பேறு குறித்த

நினைவு வெளியீடு

25.06.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புங்குடுதீவு மேற்கு பெரியபுலம் வீரகத்தி விநாயகர் ஆலயம்
(அன்னாரின் கணவரின் குலதெய்வ ஆலயம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது குடும்பத்தின் குல விளக்காய்த் திகழ்ந்து அன்புக்கும் பண்புக்கும் பாசத்திற்கும் உறைவிடமாக விளங்கி எல்லோர் வாழ்விலும் அணையாத ஒளிச்சுடராய் இருந்து எம்மை நல்வழிப்படுத்திய ஒளி விளக்கு இன்று எமைத் தவிக்க விட்டு ஈசனடி சேர்ந்த எம் குடும்ப நாயகியின் திருவடிக் கமலங்களுக்கு கண்ணீர்ப் பூக்களாய் இம்மலரை காணிக்கை செய்கிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!


குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மண்ணின் மகளாய்:
12.05.1942

விண்ணின் மகளாய்:
26.05.2015

அமரர்

# திருமதி. கணேசமூர்த்தி புவனேஸ்வரி

அவர்களின்

## திதி வெண்பா

நலம் பெருகு மன்மத வருடம் வைகாசித் திங்கள்
நன்மை தரு வளர்பிறை நவமி திதிதனில்
பாரோர் புகழ் ஐயனார் பதி உதித்த நல்லாள்
புவனேஸ்வரி பூவுலகு நீங்கி இறைவனடி அடைந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாடல்கள்

திருச்சிற்றம்பலம்



## விநாயகர் துதி

மூஷிக வாஹன மோதக ஹஸ்த
சாமர கர்ண விளம்பித ஸூத்ர
வாமநஷரூப மகேச்வர புத்ர
விக்ந விநாயகா பாத நமஸ்தே!!

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

## தேவாரம்

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவுள்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து நீ
பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே !

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்குந் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

சீரும்திருவும் பொலியச் சிவலோகநாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாத அறிவுபெற்றேன் பெற்றதார்பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழறஉளறி உமைமணவாளனுக்கு ஆட்
பாரும்விசும்பும் அறியும்பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திருமதி கணேசமூர்த்தி புவனேஸ்வரி அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் சில வரிகள்

இந்து மகா சமுத்திரத்தின் இரத்தின தீபமாம் இலங்கை மணித் திருநாட்டின் வடமாநிலத்தின் தென்புறமாய் அமைந்துள்ள சப்த தீவுகளில் ஒன்று லைடன் தீவு. வணிகர்கள், அறிஞர்கள், சைவப் பெரியார்கள், விவசாயப்பெருங்குடி மக்கள் உதித்த ஆலயச் சிறப்பு மிக்க புண்ணிய பூமியில் சரவணை எனும் புகழ் பூத்த கிராமத்தில் சீரும் சிறப்புடனும் வாழ்ந்த உயர் சைவ வேளாண்குடியில் தோன்றிய அமரர் நாகனாதி இராசம்மா தம்பதியினருக்கு மலர்ந்த ஆறு செல்வங்களில் மூத்த செல்வப் புதல்வியாக 1942ம் ஆண்டு வைகாசி மாதம் 12ம் திகதி அவதரித்தார்.

இவர் தனது இளைய சகோதரர்களான பத்மநாதன், அன்னபூரணி, பரமானந்தசிவம், கருணானந்தன், வரதராஜன் ஆகியோருக்கு செல்ல அக்காவாய் வாழ்ந்து வந்தார். இவர் தனது கல்வியை சரவணை நாகேஸ்வரி வித்தியாலயத்தில் மேற்கொண்டார். இவர் திருமணப்பருவத்தை அடைந்ததும் இவரது பெற்றோர் புங்குடுதீவு இறுபிட்டி எனும் கிராமத்தில் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வந்த சின்னையா பர்வதபத்தினி தம்பதியினரின் கனிஷ்ட புத்திரன் கணேசமூர்த்தியை 1965ம் ஆண்டு தை மாதம் 9ம் திகதி மணம் முடித்து வைத்தனர்

கணேசமூர்த்தியை வாழ்க்கைத் துணையாகப் பெற்றதனால் சிவக்கொழுந்து, ஆச்சிமுத்து, அன்னம்மா, ஏகாம்பரம், திருமேனி ஆகியோர் மைத்துனர்களாக அமையப் பெற்று குடும்பத்தின் செல்லப்பிள்ளையாய் அன்புடன் பழகினார்.

அன்னாரின் இல்லற வாழ்வின் பயனாய் மலர்ந்த பிள்ளைச் செல்வங்களான தர்மலீலா, கமலலீலா, யசோதாதேவி, நந்தினி, கஜேந்திரன், தர்சினி, ஐங்கரன், ஸ்ரீகரன் ஆகியோரை கல்வியூட்டி, பண்போடும், பாசத்தோடும் வளர்த்து வரும் வேளை, அன்னாரின் பிள்ளைகளான தர்மலீலா, நந்தினி ஆகிய இருவரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவயதிலேயே நோயின் பிடியில் சிக்கி இறைவனடி சேர்ந்துவிட மனம் துவண்டார். இந்நிலையிலும் தனது மற்றப் பிள்ளைகளுக் காக மனதைத் தேற்றிக் கொண்டு கணவரின் ஒத்துழைப்புடன் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வரும் வேளை நாட்டு சூழ்நிலை காரணமாக 1991 இல் கிளிநொச்சிக்கு இடம் பெயர்ந்து இல 264, சில்வா வீதி, வட்டக்கச்சியில் வாழ்ந்து வந்தார்.

காலங்கள் கரைந்தோட பிள்ளைகளும் வளர்ந்து திருமண வயதை அடையவே தனது கணவருடன் சேர்ந்து வரன் தேடும் படலத்தில் இறங்கினார்.

இரண்டாவது மகள் கமலலீலா (லதா) மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக்கலாசாலை முடித்து கிளி / கனகாம்பிகைக் குளம் அ.த.க பாடசாலையில் விஞ்ஞான ஆசிரியராக கடமையாற்றிக் கொண்டிருக்கும் போது புங்குடுதீவைச் சேர்ந்த முருகேசபிள்ளை பராசக்தி தம்பதியினரின் புதல்வன் "அனுரா கவுஸ்" உரிமையாளர் முருகானந்தனை வாழ்க்கைத் துணைவராக்கி கொழும்பில் வாழ வைத்தார். இவர்களது இல்லற வாழ்வின் பயனாக முகீசனைப் பேரனாகக் கண்டு களித்தார்.

அடுத்த மகள் யசோதாதேவியை ஜேர்மனுக்கு அனுப்பி அளவெட்டியைச் சேர்ந்த செல்வராசா கமலவேணி தம்பதியினரின் புதல்வன் சிவகுமாரை வாழ்க்கைத் துணைவராக்கி ஜேர்மனியில் வாழ வைத்தார். இவர்களது இல்லற வாழ்வின் பயனாக வர்சினியை பேர்த்தியாகக் கண்டு களித்தார்.

அடுத்த மகள் தர்சினியை வேலணை மேற்கைச் சேர்ந்த திருநாவுக்கரசு மீனலோஜினி தம்பதியினரின் புதல்வன் "வளர்மதி மோட்டோர்ஸ்" உரிமையாளர் திஷோகுமாரை வாழ்க்கைத் துணைவராக்கி யாழ்ப்பாணத்தில் வாழவைத்து இவர்களது இல்லற வாழ்வின் பயனாக வக்ஷனா, தேனுஜன் ஆகியோரை பேரர்களாக கண்டு களித்திருந்தார்.

பெண்பிள்ளைகளின் திருமணங்களை நிறைவேற்றி ஆண்பிள்ளைகளுக்கு தொழில் ஸ்தாபனங்களை உருவாக்கிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து களிப்புற்றிருந்த வேளை எதிர்பாராத விதமாக காலனின் சதியால் 07.05.2006 இல் தனது வாழ்க்கைத் துணையை இழந்தார். மாரடைப்பு என்ற கொடிய நோயின் பிடியில் சிக்கி இறைவனடி சேர்ந்து விட்ட தனது கணவரின் இழப்பால் பரிதவித்த போதும் அவர் விட்டுச் சென்ற பணிகளை நிறைவேற்றி அவர் ஆசைகளை பூரணப்படுத்தி அவரது ஆத்மாவை திருப்தி அடைய வைக்க வேண்டும் என்ற நோக்கில் மனதை திடப்படுத்தி நிமிர்ந்தார்.

மூத்த மகனும் "வரதா அழகுச் சோலை" உரிமையாளருமான கஜேந்திரனுக்கு மண்கும்பானைச் சேர்ந்த சிவப்பிரகாசம் தனலட்சுமி தம்பதியினரின் புதல்வி சிவரூபியை வாழ்க்கைத் துணைவியாக்கி கிளிநொச்சியில் வாழ வைத்தார். இவர்களது இல்லற வாழ்வின் பயனால் உதித்த திவ்யன், திபிஷா, லக்ஷா ஆகிய பேரர்களை கண்டு களித்தார்.

இவ்வாறாக ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்துச் செய்து கொண்டிருந்தவருக்கு அடுத்த பேரிடியும் அவர் தலையில் இறங்கியது. நாட்டு சூழ்நிலையால் இடம் பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருந்த அவரது இளையமகளின் குடும்பத்தினர் மீது எங்கிருந்தோ வந்த எறிகணை தாக்கி மருமகனின் உயிரைப் பறித்த போது நிலைகுலைந்து போனார்.

அடுத்த மகன் ஐங்கரன் கிளிநொச்சியில் "தமிழ்க்குமரன் அழகு மாடம்" என்ற ஸ்தாபனத்தை நடத்திக் கொண்டிருந்தார். நாட்டு நிலமை தீவிரமடையவே அக்கா யசோவிடம் ஜேர்மனுக்கு அனுப்பினார். அவரது திருமணத்தை பார்க்கும் ஆவலில் பெண் பார்த்து நிச்சயம் செய்து விட்டு திருமணநாளை எதிர் நோக்கி காத்திருந்தார்.

"பாபு" என செல்லமாக அழைக்கும் கடைக்குட்டி ஸ்ரீகரனை வவுனியா பல்கலைக்கழகம் அனுப்பி உயர் கல்வியை கற்ற பின் பிரான்சிற்கு அனுப்பினார். நடுமகனின் திருமணம் சுணங்கவே கடைசிமகனின் திருமணத்தையாவது பார்த்து விட வேண்டும். என்ற ஆவலில் நயினாதீவைச் சேர்ந்த தியாகமணி சியாமளாதேவி தம்பதியினரின் புதல்வி வாமதியை (கொமேர்ஷல் வங்கி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்) நிச்சயம் செய்து இந்தியாவிற்கு அழைத்துச் சென்று திருமணம் செய்து வைத்தார்.

தனது ஆறு பிள்ளைகளையும் சகோதரர்களையும் இந்தியாவிற்க்கு அழைத்து சிறப்பாக திருமணத்தை நடத்தி மகிழ்ந்தார். பல வருடங்களின் பின்னர் ஆறு பிள்ளைகளையும் சகோதரர்களையும் ஒன்றாகச் சந்தித்த அதிமிஞ்சிய சந்தோஷமோ என்னமோ மாரடைப்பு என்ற நோய் அவரை ஆக்கிரமித்தது. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர் 26.05.2015 இரவு 10.30 மணியளவில் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பெறாமகள், சகோதரன் என்று எல்லோரும் சூழ்ந்திருக்க அனைவரிடமும் விடைபெற்று பாரத மண்ணில் இறைவனடி சேர்ந்து விட்டார்.

மறைந்தது எம் அம்மாவின் உடல் மட்டும் தான். அவர் நினைவு என்றென்றும் எம்முடன் வாழும். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து அமைதி கொள்வோமாக.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

***

**பேசாதே! கேள் !! ஏற்றுக்கொள் !!!**

அதிகமாய் பேசினால், அமைதியை இழப்பாய்
ஆணவமாய் பேசினால், அன்பை இழப்பாய்
வேகமாய்ப் பேசினால், அர்த்தத்தை இழப்பாய்
கோபமாக பேசினால் குணத்தை இழப்பாய்
வெட்டியாகப் பேசினால், வேலையை இழப்பாய்
வெகுநேரம் பேசினால், பெயரை இழப்பாய்
பெருமையாய்ப் பேசினால்,
ஆண்டவனின் அன்பை இழப்பாய்

– சுவாமி விவேகானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் இனிய அன்பான அம்மாவே

அறுவரை மகவாய்ப் பெற்று
அன்புடன் அணைத்தெடுத்து
அமிர்தமாம் பாலையூட்டி பண்புடன் வளர்த்த தாயே!
மனதில் இனிமையும், மாறாத அன்பும் கொண்டே
மகிழ்வுடன் நாம் வாழ ஆதரவு தந்த தாயே.

தந்தையை நாம் இழந்த போதும்
தந்தையாய் தாயாய் அரவணைத்து ஆதரவு தந்த தாயே
துன்பங்கள் எமைச் சூழ்ந்து துயரத்தில் நாம் மூழ்க
துடிப்புடன் எமையணைத்து ஆதவு தந்த தாயே

வனப்புடன் நாம் வாழ வழிகாட்டிய வள்ளல் நீ
தாய் தந்தை இல்லாத அனாதைகளாக்கி
இன்று நீ எங்கே சென்றாய்
தூய நின் அன்பால் அனைத்தையும் மறந்து இருந்தோம்
இன்று நாம் உன் மறைவால் வருந்தாத நாளில்லை
ஆதவு தர வா தாயே

தந்தையின் வாக்குப்படி கடமைகளைச் செய்தீர்கள்
கடைசி மகனின் மணக்கோலம் கண்குளிரக் கண்டீர்கள்
நடுமகனின் வாழ்க்கைக்கு ஆதரவாய் இருந்தீர்கள்
மூத்தமகனின் வாழ்க்கைக்கு பக்கபலமாய் நின்றீர்கள்

கடைசி மகளின் வாழ்க்கைக்கு காவலாய் இருந்தீர்கள்
அனைத்தையும் இழந்து இன்று தவியாகத் தவிக்கின்றோம்
எமைத் தேற்றி ஆறுதல் தர வா தாயே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னார் தன் கணவருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேர்மனியில் இருந்தது நானும் தம்பியும் ஓடோடி வந்தோமே சில நாட்கள் எம்மோடு இருந்தது போதுமென்றா இரவு முழுக்க கண்விழித்து கதைத்த போது கூட ஒன்றும் சொல்லாமல் பாருலகம் சென்றீர்கள். ஒவ்வொரு நாளும் போனில் உங்கள் குரல் கேட்டிருந்தோம் இனியாரின் குரல் கேட்போம் அம்மா.

தர்சினி என அழைத்து ஆதரவு தந்த தாயே என் நிலை அறிந்தும் எனை மறந்து போனதேனோ எனக்கும் பிள்ளைகளுக்கும் காவலாய் இருந்தீர்கள். வழமை போல் மருந்து எடுத்துக் கொண்டு வீடு வருவீர்கள் என்று நம்பியெல்லோ வைத்தியசாலை அனுப்பி வைத்தேன். இரவு அக்காவின் குரல் போனில் "வைத்தியசாலைக்கு வாருங்கள்" என்று ஒலித்த போது என்ன ஏது என்று தெரியாமல் ஓடி வந்தேன். காவலாய் இருந்த நீங்கள் தெய்வமாகிப் போவதை என் கண் முன்னே கண்டேனே

அம்மா, உங்கள் வாழ்க்கைக் காலம் நெருங்கியதை அறிந்தா உங்களோடு இருந்த என்னை அக்காவிடம் வெளிநாடு அனுப்பி வைத்தீர். கரன் என்றால் அம்மாவுக்கு தனிப்பட்ட ஓர் பிரியம் என என் உடன் பிறப்புக்கள் கூறும் போது பெருமையுடன் இருந்தேனே அம்மா, உங்களைக் காணவென்று அயல் நாடு ஓடி வந்தேன். நீங்களுமோ கரனுக்கு விருப்பமென்று லட்டோடு வந்தீர்கள் அந்த லட்டும் கரையும் முன்பே கடமைகள் முடிந்தது என்றா எனை மறந்து போனீர்கள்.

ஐயாவைப்போல் என்று சீராட்டி வளர்த்தீர்கள் இடர்கள் பல வந்தும் காத்து நின்றீர்கள் நான் விரும்பியது எல்லாம் கிடைக்கச் செய்தீர்கள் என் அக்கா அத்தானை தாய் தந்தையாக்கி என் மணக்கோலம் கண்டு களித்தீர்கள் அறுகரிசி போட்ட கையும் கழுத்து மாலையும் வாட முன்பே காற்றாகிப் போனீர்கள்

உங்களைக் காப்பாற்ற நாம் பட்ட பாடெல்லாம் விழலுக் கிறைத்த நீராகிப் போனதுவே பொல்லாத காலனுக்கு உங்களைத் தான் தெரிந்ததுவோ அறுவரின் முன்னிலையில் விடை பெற்றுச் சென்றீர்கள் ஆண் மகவுகள் புடை சூழ ஊர்வலமாய் சென்றீர்கள். உன் ஆண் மக்கள் அனைவரிடமும் கடமை ஏற்று புண்ணியவதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான தாயே உனை இழந்த பாவிகளாய் இங்கு நாம் தவிக்கிறோம்.

ஆயிரம் உறவுகள் இருந்தாலும் அம்மா என்று அழைக்க நீங்கள் இல்லையே. உன்னிடத்தில் இருந்து ஆறுதல் தர இப்பாரினில் யாரும் இல்லையே

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கும்

உங்கள் அன்புப்
பிள்ளைகள்

***

## *கண்ணதாசனின் சிந்தனைகள் சில ...*

ஒருசெம்பில்நிறையத்தண்ணீர்இருக்கிறது!
தண்ணீர்செம்பைமிரட்டுகிறது ...
நான்உன்னைக்கரைத்துவிடுவேன்என்று
ஆனால்செம்பிற்கில்லைதலைகுனிவு
செம்புதலைகுனிந்தால்மிரட்டியதண்ணீரின்கதி! ...

தேவைக்கு மேலே பொருளும்,
திறமைக்கு மேலே புகழும் கிடைத்துவிட்டால்
பார்வையில் படுவதெல்லாம்
சாதாரணமாகத் தோன்றும்

ஒருவர் உன்னை உயர்த்திப் பேசும் போது
விழிப்போடு இரு
ஒருவர் உன்னைத் தாழ்த்தி பேசும் போது
ஊமையாய் இரு
புகழ்ந்து பேசும்போது செவிடனாய் இரு
எளிதில் வெற்றி பெறலாம்
விட்டுக் கொடுங்கள் விருப்பங்கள் நிறைவேறும்
தட்டிக்கொடுங்கள் தவறுகள் குறையும்
மனம்விட்டுப் பேசுங்கள் அன்பு பெருகும்.

போற்றுபவர் போற்றட்டும் புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை எனதுள்ளம் ஏற்றால்
எடுத்துரைப்பேன் எவர் வரினும் நில்லேன்

அஞ்சேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவில் பதிந்த உறவு மாமி

உறவுக்கு மாமியாய் உரிமைக்கு அன்னையாய் வழிநடத்திச் சென்ற நீங்கள் மாமியாய் இருந்ததில்லை மாண்பினும் மேலான தாயாக நின்றீர்கள் மாமா என்ற உறவையும் உள்ளடக்கி நின்றீர்கள்.

அன்பு மொழி பேசி என்றும் எங்களை அன்பால் அணைத்திட்ட மாமியே! மருமக்களாய் பார்க்காமல் உங்கள் பிள்ளைகளைப் போல் அன்பால் பாசத்தால் அரவணைத்த தெய்வமே எங்கு சென்றீர்கள்.

அன்பு கொண்ட இதயமதால் எங்களை அரவணைத்த மாமியே உங்கள் பிள்ளைகள் கரம்பிடித்து உங்கள் மனைபுகுந்த எங்களை வாழவைத்த அன்புத் தெய்வமே உங்கள் பொன் முகம் எங்கே, உலகில் உமைக்காண்பது எப்போ?

முத்தமிழாய் மருமகன்கள் நாங்கள் மூவர் காலத்தின் விதியதுவால் ஒருவரை இழந்து விட்டோம் இழப்பின் பால் நீங்கள் பட்ட வேதனையை கண்முன்னே நான் கண்டு பரிதவித்தேன். ஐயோ எனக் கதறி மயங்கி வீழ்ந்த காட்சி தனை நினைக்கும் போதெல்லாம் ஈரற்குலை நடுங்கிறதே.

மூத்தவர் நீங்கள் மாமாவிடத்திலிருந்து கவனித்துக் கொள்ளுங்கள் என்று அடிக்கடி கூறும் குரல் என் காதில் ஒலிக்கிறது. ஆனால் உங்கள் புன்பூத்த முகத்தை மட்டும் தேடுகின்றேன் காணவில்லை.

மாமா விட்டுச் சென்ற இடத்திற்கே திரும்பி வந்து இறுதிப்பயணம் அதை மேற்கொண்ட மாயமென்ன சந்தோஷக் கப்பலில் என்னோடு சேர்ந்தல்லோ மகன், மகள், பேரனுடன் இந்தியா வந்தீர்கள் திரும்பி வரும் போது உங்களைத் தொலைத்து விட்டு சோகக்கடலில் நீந்தியல்லோ வர வைத்து விட்டீர்கள்.

திக்கொன்று திசைக்கொன்றாய் நாங்கள் வாழ்ந்தாலும் உங்கள் முகம் காண இருக்குமிடம் தேடி ஓடி வருவோமே மைத்துனரின் கலியாணம் காணவர இருந்த போது உங்கள் முகம் என் கண்முன்னே தோன்றியதே உங்கள் முகம் காணும் ஆவலில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடர் பல நீக்கி வெளிக்கிட்ட வேளை உங்கள் பேர்த்தியின் பரீட்சைக்காய் பயணமதைத் தள்ளி வைத்தேன். காலன் உங்களை அழைப்பது தெரிந்திருந்தால் பரீட்சையையும் பார்க்காமல் பேர்த்தியுடன் பறந்தோடி வந்திருப்பேன்.

இறுதி நேரமதில் மாமாவையும் காணவில்லை விரைவில் வருவேன் என்ற என் வாக்கை நம்பாமல் உங்களையும் காணாத பாவியாக்கி போனீர்களே.

மாமி நீங்களெங்கே போன வழி எதுவோ காணாமல் தேடுகின்றேன். நெறி இழந்து தவிக்கிறேன் ரூபி என நீங்கள் சேமமாய் அழைக்கும் போதும் மக்களுக்கு மேலாக எனை நீங்கள் மதித்த போதும் பெருமை கொண்டு பரிவுடனே வாழ்ந்தேனே.

திரும்பி வருவீர்கள் என்றெல்லோ-பாவி நான் வழியனுப்பி வைத்து விட்டு காத்திருந்தேன். வரும் நாளை எதிர்நோக்கி காத்திருந்த எனக்கோ உங்கள் பிரிவுச் செய்தி தான் பேரிடியாய் வந்ததுவே.

திரும்பி வரும் வரை பிள்ளைகளை கவனமாகப் பார் என்று சொல்லிச் சென்ற நீங்கள் அஸ்தியாய் என் வீடு வந்து சேர்ந்த போது நிலைகுலைந்து பரிதவித்துப் போனேனே.

இதயத்து வேதனையைச் சொல்ல முடியவில்லை. தேம்பி அழும் உங்கள் மகனாருக்கும் ஆறுதல் கூற முடியவில்லை. மகனாரின் திருமணம் காண சந்தோஷமாய் வந்தீர்கள். மகனாரின் மணக்கோலம் கண்டு பூரிப்படைந்தீர்கள். அறுகரிசி போட்டு ஆசீர்வாதமும் தந்தீர்கள்.

என்னோடு பழகியது சிலகாலம் என்றாலும் அன்பினிக்கப் பேசி அரவணைத்து நின்றீர்கள் சேவைகள் பல செய்ய காத்திருந்தேன் நானெல்லோ. செய்தது போதுமென்றா சொல்லாமல் சென்றீர்கள்.

மாமா நினைத்தது போல் மருமக்கள் அனைவரையும் பார்த்து விட்ட சந்தோஷத்தில் அழைத்து விட்டார் தங்களிடம். எம் உயிர் உள்ள வரை நாமம் கூறி நிற்போம் கலங்கியே நின்று கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகிறோம்.

ஓம் சாந்தி

அன்பு மருமக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் நினைவில் எங்கள் எண்ணங்கள்

தினம் உங்கள் முகம் கண்டு
மந்திரப் புன்னகையில் மனம் மகிழ்ந்து
நீங்கள் இட்ட பணிகளை உடன் செய்து
என்றும் உங்கள் அரவணைப்பில் இருப்போமே

அம்மம்மா, அப்பம்மா என நாம் அழைக்க
அறிவுரைகள் பல சொல்லி ஆதரித்து காத்தீர்கள்
எம் பெற்றோர் எமைக் கடிந்தால் ஆதரவு
தேடியல்லோ உம் பின்னால் ஒளிந்து கொள்வோம்
இனி என்ன செய்வோம், உங்களுக்காய், மனம்
உருகி வேண்டுகிறோம் விரைவில் விரைந்தோடி வாருங்கள்.

ஆசைப் பேரப்பிள்ளைகள்

## எங்கே தேடுவோம் அம்மம்மாவை

எங்களை விட்டுப் பிரிந்த எங்கள் அம்மம்மாவே
உங்கள் பாசத்தை உயிர்த்துடிப்பை எவ்வாறு
வாயாரச் சொல்லுவோம்
உங்களின் அன்பு மொழி கேட்டு
இன்புற்று இருந்தோம்
எம்மைத் தூக்கி வளர்த்து இன்மொழிகள் கூறி
மகிழ்வித்த அம்மம்மாவே
நாங்கள் மகிழ்ச்சியாக இருந்த பொன்நாளில்
ஆண்டவன் பாதம் சென்றடைந்தீர்களே
பாசத்தைக் காட்டி பாரினிலே
எமைத் தவிக்க விட்டுச் சென்றீர்களே
என்ன செய்வோம் நாம்.

தாத்தாவை இழந்தோம் என்றிருக்க இன்று உங்களையும் இழந்து விட்டோம். அடிக்கடி போனில் நலம் கேட்டு விசாரிக்கும் நீங்கள் எங்கே தான் சென்றீர்கள். தேடுகின்றோம் நாங்கள் அம்மம்மா.

ஆசைப் பேரப்பிள்ளைகள்
வக்ஷனா, தேனுஜன், முகீசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசமுள்ள அம்மம்மா

மறைந்தீரே அம்மம்மா எனை மறந்து போனீரே உன் பேரர்கள் எல்லோரும் சூழ்ந்திருக்க வாழ்ந்தீர்கள் . நான் மட்டும் வெகு தொலைவில் தனியாக நின்றேனே. சில நாட்கள் உங்களுடன் பழகிய பாக்கியம் கிடைத்த போது உங்கள் பாசத்தில் மெய் மறந்து இருந்தேனே நான் திரும்பவும் அந்த நாட்களுக்காய் காத்திருந் தேன். ஆனால் காலனின் சதியால் அந்த நாட்கள் எனக்கு கிடைக்காமலே போனதுவே.

உங்கள் முகம் காண வர இருந்த வேளை பரீட்சை என்ற ஏவுகணையால் என் பயணம் தடையாகிப் போனதே. மாமாவின் திருமணத்தில் குதூகலமாய் இருந்த நீங்கள் எனை மறந்து போனதேனோ. என் மீது என்ன கோபம் எனை மறந்து போவதற்கு மூத்த பேத்தி என்று பெருமையுடன் கூறும் நீங்கள் சொல்லாமல் போனதேனோ. அடிக்கடி போனில் உங்கள் குரல் கேட்டிருப்பேன். எனி எப்போ உம் குரல் கேட்பேன் அம்மம்மா.

ஜேர்மனியிலிருந்து
செல்லப் பேத்தி
வர்சினி

## எங்கள் ஆருயிர் அப்பம்மாவே...!

இந்தியா சென்று வருகிறேன் கவனமாய் இருங்கள் என்று சொல்லிச் சென்றீர்கள். நாங்களும் மிக விரைவாக எங்களிடம் வந்து விடுங்கள் என்று சொல்லி வழி அனுப்பினோம். வழி மேல் விழி வைத்து ஒவ்வொரு நாளையும் எண்ணி எண்ணி காத்திருந்தோம். உங்கள் சின்னப் பேத்திக்கு சொன்னீர்களே நான் வருவதற்கு பதினைந்து நாட்கள் செல்லும் அது வரை கதை சொல்வதற்கு ஆளில்லை விரைவாக வந்திடுவேன் அழாதே என்று சொல்லி முத்தம் கொடுத்து சென்றீர்களே. அது தான் கடைசி முத்தம் என்று எங்களிற்கு தெரியாதே அப்பம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா போனில் சொன்னாரே இனி எங்களிடம் அப்பம்மா வர மாட்டார் என்று. எங்கள் நெஞ்சம் ஒரு கனம் நின்றதே. கடைசியாக உங்களை பார்ப்பதற்கு எங்களிற்கு கொடுத்து வைக்கவில்லையே. உங்கள் வாயில் அன்பாய் மருந்தைக் கொடுக்க நீங்கள் ஆ...... சொல்லி மருந்தை சாப்பிடுவீர்களே இனி எப்போ கிடைக்கும் அப்பம்மா. நீங்கள் வருவீர்கள் என எதிர்பார்ப்போடு இருக்கும் ........

உங்கள் பேரப்பிள்ளைகள்
க.திவ்வியன்
க.திபிஷா
க.லகீஷா

## நீங்காத நினைவலைகள்

சரவணை பள்ளம்புலத்தில் வாழ்ந்த பழைய கால நினைவு களை புரட்டிப் பார்த்தேன். நான் இளமையில் பாட்டுப் பாடிக் கொண்டு தலையில் தாளம் போட்டுக் கொண்டால் நீங்கள் சொல்வீர்கள் தலையில் தாளம் போடாதே என்று பள்ளம்புல இளமை வாழ்க்கை, மண்வீடு முற்றத்து வேம்பு எல்லோரும் கூடி இருந்து குசினியில் சாப்பிடும் மாறாத இளமையின் நினைவுகள்.

இளமையில் நீங்கள் காட்டிய அன்பு இதயத்தில் பதிந்தவை. நான் உங்களை கடைசியாக சந்தித்து விட்டு நீங்காத நினைவுகளோடு திரும்பி வரும் பொழுது நான் உங்களை இழப்பேன் என்று நினைக்கவில்லை. மூத்த குழந்தை பெண்ணாக இருந்தால் இளைய குழந்தைக்கு இறைவன் அளித்த இன்னொரு தாய்தான் அக்கா. உங்களுடைய நினைவுகள் என்றும் என் இதயத்தில் வாழும்

அன்புத் தம்பி
Dr.நாகனாதி பரமானந்தசிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசத்தின் உறைவிடம் அக்கா

பாசத்தின் சிகரமாய்
பண்பின் உறைவிடமாய்
மனிதருள் மாணிக்கமாய்
பண்பு நிறைந்த பேரொளியாய்

அனைவருக்கும் வழிகாட்டும் அன்பு எனும் சக்கரத்தில் அக்கா என்ற சொல்லில் ஒன்றிணைந்தோம்.

உறவின் பாலமாய் நின்ற உறவைத் தொலைத்து எம் உறுதுணை இழந்தோம் அக்கா நின் இடம் நிரப்ப இங்கு யாருளார்- எண்ணும் போதெல்லாம் உள்ளம் நெருக்குதையோ தந்தையை தாயை நாமும் தரணியில் இழந்த போது தந்தையை தாயாய் நின்று எம் சிந்தையைக் குளிர வைத்த அன்புடைய தாயே எமை ஏங்க வைத்து எங்கு சென்று மறைந்தீரோ. உன் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கும்...

சகோதரர்கள் சார்பில்
நாகனாதி, வரதராஜன்

***

## அமைதி பெற என்ன வழி

☛ அகத்தூய்மை இல்லாவிட்டால் புறத்தூய்மையால் பயனேதும் இல்லை. ஆன்மிக ஒளியற்ற மனிதன் எவ்வளவு அழகுடையவனாக இருந்தாலும் விலங்குக்குச் சமமாவான்.

☛ மனத்தூய்மை பெற்று விட்டால் நம்மிடம் உயர்குணங்கள் மேலோங்கும். மனம் ஒருமுகப்படும். உற்சாகம் உள்ளத்தில் ஊற்றெடுக்கும்.

☛ இறைவன் பெரிய காந்தக்கல்லைப் போல இருக்கிறார். நாம் அனைவரும் இரும்புத்துகள் போல அவரால் கவரப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

☛ கடவுள் மீது நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை உண்மையானதாக இருக்குமானால், உங்களுடையது என கருதுகின்ற அனைத்தும் அவருடையது என்று நம்புங்கள்.

விவேகானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சில் நிறைந்து இருக்கும் பெரியம்மா

எம் தாயின் அக்கா நீ. எமக்கு நீ பெரியம்மா அம்மாவை இழந்த சோகம் எம்மை ஆழ்ந்த போதும் திக்கொன்று திசைக்கொன்றாய் திசை மாறிச் சென்ற போதும் உம் அன்பால் நிதம் பேசி ஆறுதல் செய்வீரே.

உம் வீட்டுக்கு வந்து விட்டால் மணியத்தார் எங்கே என்று கேட்கும் ஒலியும், பேரர்கள் உங்கள் வண்டிலை தள்ளிச் செல்லும் காட்சியும் கண்முன்னே தெரிகிறதே.

வவா, சுதா, வாசுகி என நீங்கள் அழைக்கும் குரல் இன்னும் ஒலிக்கிறதே ஆனால் கண்முன்னே உங்களைத் தான் காணவில்லை. அம்மா என்ற இலக்கணத்திற்கு உற்ற உறவாய் இருந்தீரே இறுதிக் கடன் செய்ய எனையும் அழைத்தீரோ கூட வந்த என்னை தனியாக விட்டீரே இறுதிக் காலமதில் எமை மறந்து போனீரோ காலனின் சதியால் தனியாகப் போனீரே.

உம் நெஞ்சத்து நினைவுகளால் எம் கண்கள் துஞ்ச மறுக்குதம்மா. இவ்வுலகில் மிஞ்சாது ஒன்றும் என்று நீரும் பரமபதம் போனீரோ

பெறாமக்கள் சார்பில்
கல்பனா (வவா)

## முகம் பார்க்க ஏங்கும் நெஞ்சங்கள்

வம்சத்தின் குலவிளக்காய் முதற் பூத்த சுடர் கொடியே? பாசத்தின் உறைவிடமே? "பெரியக்கா" "அக்கா" என்று கூறினால் ஒரு கொடியில் பூத்த மலரா? என்ற கேள்விக்கு சிரித்தபடி பதில் கூறுவேனே. இனி யாரை அக்கா என்று அழைப்பேன். கண் உறங்கும் நேரத்தில் ரெலிபோனில் வந்த செய்தியை நம்ப முடியவில்லையே உண்மையா? என்று அறியத் துடிக்கும் வேளையில் உனது பிள்ளைகளின் அலறல் ஒலி காதைப் பிளந்ததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீரும் மூன்று முறை என்பது போல் சென்ற மண் மூன்றாவது முறை உமை கவர்ந்து விட்டதே என் செய்வோம். உறவுகள் உற்றார் என்று ஏங்கித் தவித்த நீங்கள் யாருமற்ற ஊரில் தனியே அலைகின்றீரோ? வேதனை, சோதனைகள் இன்னல்களை கூறி ஆறுதல் பெற இனி யாரிடம் செல்வோம் அக்கா?

ஆசையப்பு, ஆசையம்மாவின் பிள்ளைகள் என்ற வார்த்தைகளை இனி எப்போ கேட்போம் "ராணி" என்று கூப்பிடும் குரல் எங்கும் அதிர்கின்றதே பிரமையில் நெஞ்சம் துடிக்கின்றதே.

கடல் கடந்து உமது கடமைகளை இனிதே முடித்து கண் இமைக்கும் நேரத்தில் கணப்பொழுதில் எமை கதிகலங்க வைத்து தனி வழியே போனதெங்கே? ஆனைவாயில் அகப்பட்ட கரும்பு போல, கடலில் தத்தளிக்கும் கப்பல் போல எமை நிலைக்குலைய வைத்து சென்றீர்களே.

வேரோடி விளாத்தி முளைத்தாலும் தாய் வழி தப்பாது என்று ஒற்றுமையாக இருந்த வாழ்க்கையை விட்டு பிரிந்து விண்ணகம் சென்றது உண்மைதானா? - என்பதனை ஏற்க எம் மனம் மறுக்கின்றதே "பெரியம்மா" என்று ஆசையாக போனில் கதைத்தோமோ? இதுதான் கடைசி வார்த்தைகளா? என்று எம்மால் எண்ணிப் பார்க்க முடியவில்லையே என்று ஆர் பரிக்கும் எனது பிள்ளைகள் உறவுகள் யாருமற்ற தேசத்தில் தனியே நின்று தவிக்கும் உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும்

ஆசையப்பு குடும்பம் சார்பாக
இராசதுரை ராணி

***

அன்பு என்பது சொற்களில் வாழ்வதில்லை.
அன்பை சொற்களால் விளக்கவும் முடியாது.
செயல்களால் விளக்கம் பெறுகிறது அன்பு

– ஆபிரகாம் லிங்கன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









# அன்னாரின் வாழ்க்கைப் படிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புக்குரிய அக்கா

காலக்கட்டளையா? காலனின் கட்டளையா?

பிறக்கின்ற போதே இறக்கின்ற செய்தி இருக்கின்றது என்பதே உண்மையாயினும் சிலரது இறப்பு மிகவும் மனக்கவலையை ஏற்படுத்தி விடுகிறது.

அந்த வகையில் எமது குடும்பங்களுக்கு முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் விளங்கி எம்மை விட்டு பிரிந்த உங்களின் ஆத்மா சாந்தியடைய முதற்கண் பிரார்த்திக்கின்றோம்.

எப்படியாகினும் அக்கா நீங்கள் காலனை வென்றவர் காலத்தின் கோலத்தில் சிதறுண்ட பிள்ளைகள் அனைவரையும் ஒன்றிணைத்து ஆரத்தழுவி, வளமுடன் வாழ வாழ்த்தியபடி, நீங்கள் நினைத்த தெல்லாம் முடித்த பின் தானே. காலன் உங்களை தொட முடிந்தது. நாம் கவலைப்பட தேவையில்லை.என்றாலும், எமது குடும்பங்களின் மூத்தவளாய் அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்த நீங்கள், இன்று எம்முடன் இல்லையென்றால் எம் மனது தாங்குமா? நாம் சிறகிழந்த பறவைபோல் துடிக்கின்றோம்.

அக்கா, தாங்கள் உடலளவில் மரித்திடினும், என்றும் எமது நெஞ்சங்களில் நீங்காத இடம் பிடித்து நிலைத்திருப்பீர்கள்.

உங்கள் ஆன்ம சாந்திக்காய்
உளமாற வேண்டி நிற்கும்,
குஞ்சியம்மாவின் பிள்ளைகள்
லிங்கம், ராசா, ஈசன்,
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்



திருச்சிற்றம்பலம்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
ஐந்து கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்(து) அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடல்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்மமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண் முகமாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித்(து) எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி யிரண்டுக்(கு) ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்(து) அழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந் தம்அளித்(து)
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்(கு) அணுவாய் அப்பாலுக்(கு) அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்த ஷஷ்டி கவசம்



## காப்பு

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்–கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும், நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசம் தனை.
அமர ரிடர்தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடனஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலால் எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக!
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ர ர ர ர ர ர ர ர
ரிவண பவச ரி ரி ரி ரி ரி ரி ரி
விநபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசுர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சவ்வும்
உய்யொளி சௌவும் உயிரைங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன் தினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியில் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா வினோ தனென்று
உன் திருவடியை உறுதியென் றெண்ணும்
எந்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகளி ரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமி ரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை ரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
பணைத் தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகளி ரண்டும் கருணைவேல் காக்க
முன்கையி ரண்டும் முரண்வேல் காக்க
பின்கையி ரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளிவாய்ப் பேய்களும், குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசு காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர் களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்ட பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடு விடு வேலை வெகுண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
குலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக் குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன் திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துத் தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தனிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பாலகு மாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணிய
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கிலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்கு அருளுவர்
மற்றவ ரல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரட்டாய் வாழ்வார்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்ரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி!
தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா போற்றி கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேளே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே!
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்!
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேதாரகௌரி விரதம்



## காப்பு

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற்கா.

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளிதாயே
கொடியமகிஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமை அணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாக் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குத் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தலைவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணபொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏந்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல்லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்

(தாயாருக்கு கடமை செய்த போது பாடியது)

ஐயிரண்டு திங்களா யங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யஇரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பே இனி 01

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாள் அளவும்
அந்திபக லாச்சிவனை யாதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
வெரியத் தழல்மூட்டு வேன் 02

வட்டிலிலுந் தொட்டிலிலும் மார்மேலுந் தோள் மேலுங்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன் 03

நொந்து சுமந்து பெற்று நோவாம லேத்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே - அந்தி பகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும் தாய் தனக்கோ
மெய்யிலே தீ மூட்டுவேன் 04

அரிசியோ நானிடுவே னாத்தா டனக்கு
வரிசையிட்டு பார்த்து மகிழாமல் - உருசியுள்ள
தேனே! அமிர்தமே! செல்வத் திரவியப்பூ
மானே என அழைத்த வாய்க்கு 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளியிடுவ தரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகமேன் முகம்வைத்து முத்தாடி யென்றன்
மகனே யெனவழைத்த வாய்க்கு 06

முன்னை யிட்ட தீ முப்புரத்திலே
பின்னை யிட்ட தீ தென் னிலங்கையில்
அன்னை யிட்ட தீ அடிவயிற்றிலே
யானு மிட்ட தீ மூள்க மூள்கவே 07

வேகுதே தீயதனில் வெந்து பொடி சாம்பல்
ஆகுதே பாவியே னையகோ - மாகக்
குருவி பறவாமற் கோதாட்டி யென்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை 08

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ - சந்ததமு
முன்னையே நோக்கி யுகந்துவரங் கிடந்துஎன்
றன்னையே யீன்றெடுத்த தாய் 09

***

எங்கே வாழ்க்கை தொடங்கும்
அது எங்கே எவ்விதம் முடியும்
இதுதான் பாதை இதுதான் பயணம்
என்பது யாருக்கும் தெரியாது
பாதையெல்லாம் மாறிவரும்
பயணம் முடிந்துவிடும்
மாறுவதைப் புரிந்துகொண்டால்
மயக்கம் தெளிந்துவிடும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்பத்தின் குலவிளக்கு 26.05.2015 இந்தியாவில் காலமான செய்தி கேட்டு ஓடி வந்து உதவிகள் செய்த உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் வெளிநாடுகளில் இருந்தும் உள்நாடுகளில் இருந்தும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு எம் துயரில் பங்கு கொண்டோருக்கும் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியம் போன்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டோருக்கும் எல்லா வழிகளிலும் உதவிய இந்தியா, இலங்கை வாழ் உறவுகள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம் நன்றியுடன்
குடும்பத்தினர்.

இல.264
சில்வா வீதி, வட்டக்கச்சி
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடைய எதை இழந்தாய், எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாகுவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.

**இதுவே உலக நியதியும் , எனது படைப்பின் சாரம்சமுமாகும்**

**பகவான் ஸ்ரீகிருஸ்ணர்**

Vihadan Printer
541/2, Galle Road, Colombo 06.
0112504370
vihadanpr@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org